செ.கு. எண் :- 244

நாள் :- 08.12.11.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

### அறிக்கை – 8.12.2011

கடலூர் மாவட்ட நுண்ணறிவுப் பிரிவில் ("Q" Branch, Intelligence) முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. பாலச்சந்தர் என்பவர் 29.11.2011 அன்று பண்ருட்டி – கடலூர் மாநில நெடுஞ்சாலையில் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது லாரி மோதியதால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

காவலர் திரு. பாலச்சந்தர் பணியில் இருக்கும் போது காலமானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. திரு. பாலச்சந்தர் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலை விபத்தில் காலமான முதல் நிலைக் காவலர் திரு. பாலச்சந்தர் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9